www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுத் தேர்வு – செப்டம்பர் 2023

11320

11-ஆம் வகுப்பு

## வரலாறு

மதிப்பெண்கள் : 90

காலம் : 3.00 மணி

**I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 20 x 1 = 20

1. வரலாற்றின் பழமையான காலம் .............ஆகும்.
   அ) பழங் கற்காலம் ஆ) புதிய கற்காலம் இ) செம்புக்காலம் ஈ) இரும்புக்காலம்
2. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ..... இருந்தது.
   அ. வேளாண்மை ஆ. மட்பாண்டம் செய்தல் இ. கைவினைத்தொழில்கள் ஈ. மீன் பிடித்தல்
3. மேல் கங்கைச் சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது ?
   அ) குரு–பாஞ்சாலம் ஆ) கங்கைச்சமவெளி இ) சிந்துசமவெளி ஈ) விதேகா
4. கீழ்க்காணும் இணைகளை கவனிக்கவும்
   i) சேனானி – படைத்தளபதி ii) கிராமணி – கிராமத்தலைவர்
   iii) பலி – தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது iv) புரோகிதர் – ஆளுநர்
   மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது ? அ) i ஆ) ii இ) iii ஈ) iv
5. ........... வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.
   அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை
6. வடஇந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு ...... ஆகும்.
   அ) கோசலம் ஆ) அவந்தி இ) மகதம் ஈ) குரு
7. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர்
   அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப் இ) சர் ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்
8. கரிகாலன் ................ மகனாவார்.
   அ) செங்கண்ணன் ஆ) கடுங்கோ இ) இளஞ்சேட் சென்னி ஈ) அதியமான்
9. இக்சவாகுகள் ................ பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.
   அ) ஆந்திரா – கர்நாடகா ஆ) ஒடிசா இ) தக்காணப் பகுதி ஈ) பனவாசி
10. அலெக்ஸாண்டரின் திறன்மிக்க தளபதிகளுள் ஒருவர் ............
    அ) செலியுகஸ் நிகேடர் ஆ) அன்டிகோனஸ் இ) அண்டியோகஸ் ஈ) டெமெட்ரியஸ்
11. குஷாண நாணயங்கள் ................ நாணயங்களைவிட உயர்ந்த தரத்தில் இருந்தன .
    அ) ரோமானிய ஆ) கிரேக்க இ) குப்த ஈ) சாதவாகன
12. தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் ............
    அ) திக்நாகர் ஆ) வசுபந்து இ) சந்திரகாமியா ஈ) வராகமிகிரர்
13. .....என்ற சீனப் பயணி பொ.ஆ 5 ஆம் நூற்றாண்டின் இந்திய சமூகத்தைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.
    அ) இட்சிங் ஆ) யுவான் –சுவாங் இ) பாஹியான் ஈ) வாங் – யுவான் –சீ
14. கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது ?
    அ) ஹர்ஷசரிதம் ஆ) பிரியதர்சிகா இ) அர்த்தசாஸ்திரா ஈ) விக்ரம ஊர்வசியம்
15. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?
    அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.
    ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார் .
    இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப்பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன.
    ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.
16. ஹர்ஷர் கன்னோசியின் அரியணையை ..................இன் அறிவுரையின்படி ஏற்றுக் கொண்டார்.
    அ) கிரகவர்மன் ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர் இ) பிரபாகரவர்த்தனர் ஈ) போனி
17. காம்போஜம் என்பது நவீன
    அ) அஸ்ஸாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் ஈ) கம்போடியா
18. கஜினி மாமுது இந்தியாவுக்குள் ............ முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினார்.
    அ) 15 ஆ) 17 இ) 18 ஈ) 19



CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

19. ஒரு களத்துக்குச் சமம் ஆகும்
அ) 28 கி.கி ஆ) 27 கி.கி இ) 32 கி.கி ஈ) 72 கி.கி

20. ....... பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும் .
அ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்

**II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி. வினா எண் 30 கட்டாய வினா. 7 x 2 = 14**

21. பெருங்குளம் – சிறுகுறிப்பு வரைக.
22. மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?
23. எதன் காரணமாக மகா அலெக்சாண்டர் போரஸின் அரியணையைத் திருப்பித் தந்தார் ?
24. பண்டமாற்று முறையை விளக்குக
25. நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபிடகங்களை எழுதுக.
26. ஹூணர் குறித்து நீங்கள் அறிவது என்ன ?
27. ஹர்ஷப் பேரரசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் யாவை ?
28. திருப்புறம்பியம் போரைப் பற்றி நீ அறிந்தது என்ன?
29. நாற்பதின்மர் அமைப்பு.
30. சம்புவராயர்கள் பற்றி குறிப்பு வரைக.

**III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40 கட்டாய வினா. 7 x 3 = 21**

31. ஹரப்பா மக்களின் "நம்பிக்கைகள்" குறித்து நீங்கள் அறிந்தது என்ன?
32. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.
33. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நீவிர் அறிவது என்ன?
34. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்
35. பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.
36. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணங்கள் யாவை? ஏதேனும் மூன்று காரணங்களைக் கூறுக.
37. ராஷ்டிரகூடர்கள் சமண மதத்திற்கு அளித்த ஆதரவு.
38. பல்லவர்களின் நிர்வாகப் பிரிவுகள்
39. மாலிக்காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக
40. இராஜேந்திர சோழன் "கடாரம் கொண்டான்" என அழைக்கப்படுவதேன் ஏன்?

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7 x 5 = 35**

41. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக. (அல்லது)
ஆ) சிந்து நாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது?

42. அ) வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக. (அல்லது)
ஆ) புத்தரின் எண் வழிப்பாதையை விவரி .

43. அ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும். (அல்லது)
ஆ) களப்பிரார் என்போர் யார் ? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?

44. அ) பொ.ஆ 1 ஆம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்த விவரங்கள் தருக. (அல்லது)
ஆ) ஹர்சவர்த்தனரின் பேரரசின் எல்லையைக் குறித்து கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.
1. கன்னோசி 2. தானேஷ்வரம் 3. உஜ்ஜையினி

45. அ) "குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்" விவாதிக்கவும். (அல்லது)
ஆ) ஸ்ரீகுப்தர் முதல் ஸ்கந்தகுப்தர் வரையிலான குப்த அரசர்களை வைத்து காலக்கோடு வரைக.

46. அ) ஹர்ஷரின் வடஇந்தியப் படையெடுப்புகள் குறித்து விவரி. (அல்லது)
ஆ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.

47. அ) இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு?
(அல்லது)
ஆ) சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பாசன, விவசாய நிர்வாகத் திட்டங்கள் அதிக வருமானத்துக்கு வழிவகுத்தன – ஆராய்ந்து எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner